**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 2, January 2023** **E-ISSN: 2583-0481**

# A Periodic Review on Women Status in Feminism

**Dr. I. Priyadharshini,** Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-17, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-8561-652X**
**DOI: 10.5281/zenodo.7593128**

## Abstract

*In our modern culture, all people view women as usable things. Women are always struggling with many problems like social status and other problems etc. From ancient times till today, no poet has not sung about women. Feminist ideas vary from nation to nation from time to time. Feminist ideas have been developed according to their country's cultural traditions and socio-political economic environment. Feminist ideas are also growing in Tamil Nadu considering the social, political, cultural and economic conditions of this land. A man's life is complete only in the approval and acceptance of womanhood. A woman should always be proud to protect herself and her dependents. This article aims to do research on women's status from the Vedic period to the contemporary period in feminism.*

**Keywords:** Periodic, Review, Women, Status, Feminism.

## References

[1] Nani. *Pengalumvalvialpadaipum.* Tamil Neyam. Kovai, First Edition, 2003.
[2] MuthuChithambaram. *Penniyam Thortamumvalarchiyum*.Tamil Puthagalayam, Chennai, Fifth Edition-2005.
[3] Munivar Vijayalakshmi. *Pengalum Ullarntha Thanigaiyamappum.* Tamil Puthagalayam, Chennai.
[4] Rajam Krishnan. *Kalanthorum Pen.* National Book Trust, New Delhi, 2002.
[5] Bharathiyar. *Bharathiyar Kavithaigal*. National Book Trust, New Delhi. 2003.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# பெண்ணிய நோக்கில் காலந்தோறும் பெண்ணிய நிலை - ஒரு பார்வை

**முனைவர் ஐ. பிரியதர்ஷினி,** உதவிப் பேராசிரியர்,தமிழாய்வுத் துறை, பிஷப் ஹீபர்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி -17, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-8561-652X
DOI: 10.5281/zenodo.7593128

**ஆய்வுச்சுருக்கம்**

*இன்றைய காலகட்டத்தில் பதவிகளின் பரபரப்பான சூழலில் பெண்ணைப்பரவசம் தரும் ஒரு நறுமணப் பொருளாகத்தான் பலரும் பார்க்கின்றார்கள். சமூகநிலை வாழ்க்கைப் பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டு போராடுகின்றவர்களாகத்தான் பெண்கள் இருக்கின்றார்கள். பெண்ணியநோக்கில் காலந்தோறும் பெண்களின்நிலை ஒருபார்வை இக்கட்டுரையில் வேதகாலம் தொடங்கிதற்காலம் வரையிலான பெண்களின் நிலையினை பெண்ணியநோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்:** பெண்ணியம், காலந்தோறும் பெண்ணியம், நிலை, பார்வை.

**முன்னுரை**

பண்டைய காலம் முதல் இன்று வரை பெண்களைப் பற்றி பாடாத புலவர்களே இல்லை எனலாம். பெண்ணியச் சிந்தனைகள் காலத்திற்கு காலம் தேசத்துக்கு தேசம் மாறுபாடு கொண்டதாகக் காணப்படுகின்றது. தங்கள் நாட்டுக் கலாச்சாரப் பண்பாடுகளுக்கு ஏற்பவும் சமூக அரசியல் பொருளாதாரச் சூழலுக்கு ஏற்பவும் பெண்ணிய சிந்தனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலும் பெண்ணியச் சிந்தனைகள் இந்த மண்ணின் சமூக, அரசியல் சிந்தனைகள் பண்பாடு மற்றும் பொருளாதார நிலைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு வளர்ந்து வருகின்றன. ஒரு மனிதனின் வாழ்க்கையானது பெண்மையில் மட்டுமே முழுமை அடைகின்றது. தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காக்கக் கூடிய பெருமை கொண்டவளாகப் பெண் திகழ்கின்றாள் இத்தனை பெண்களின் நிலையினைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**வேத காலத்தில் பெண்களின் நிலை:**

வரலாற்று நோக்கில் இந்தியப் பெண்களின் சமூக நிலைமையை நோக்கும் பொழுது சமுதாயத்தின் ஆரம்ப கால கட்டங்களில் பெண்களின் நிலையானது மேம்பட்டே இருந்தது எனக் கூறலாம். ஆரம்ப கால கட்டங்களில் ‘தாய் வழிச் சமுதாயமே’ வழக்கில் இருந்து வந்தது. இந்தியப் பெண்களின் சமுதாய நிலையை வரலாற்று நோக்கில் ஆராய்ந்த ‘அல்டேகா’ கோசாம்பி, குர்யே முதலிய சமூக அறிஞர்களும், சரித்திர வல்லுனர்களும் வேதகாலத்தில் பெண்களின் நிலை மேன்மையுற்றே இருந்தது என்பதை சில ஆதாரங்களோடு விளக்கியுள்ளனர். இதை

**ரிக் வேதத்தில் காணப்படும் சில பாடல்கள்**

**அக்காலத்தில் வாழ்ந்த சில பெண்களால்**
**இயற்றப்பட்டவை என்று அறியமுடிகின்றது.**
**அக்காலப் பெண்கள் தத்துவவாதிகள்,**
**பிரமவதனிகள் என்றழைக்கப்பட்டனர்.**
**மேலும் கார்க்கிஇ வசக்னவி, மைத்ரேயி,**
**போன்றவர்களும் பொது விவாதங்களில்**
**கலந்து கொண்ட தத்துவ ஞானிகள் (பெண்களும் வாழ்வியல் படைப்பும்,ப-12)**

என்ற செய்தி கொண்டு அறியலாம். வேதகாலத்தில் பெண்களும், ஆண்களைப் போன்று குருகுலக் கல்வி கற்றனர். ஆண்களுக்கு இணையாகவும் நடத்தப்பட்டனர். ஆண்கள் செய்யக்கூடிய விவசாயம், நெசவுத் தொழில், மட்பாண்டம் வனைதல் போன்ற தொழில்களையும் செய்து வந்தனர். ஆண்களைப் போலவே வில், அம்பு போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி போர்த் தொழிலிலும் ஈடுபட்டு வந்தனர். பெண்கள் ஆசிரியர்களாகவும், பாடகிகளாகவும், அதிகாரிகளாகவும், பணிபுரிந்து வந்துள்ளனர். இந்தச் செய்திகளால் வேதகாலத்தில் பெண்களின் நிலையானது உயர்வாக இருந்துள்ளது என்று அறிய முடிகின்றது.

**சங்க காலச் சமுதாயத்தில் பெண்களின் நிலை**

சங்க காலத்தில் மகளிருக்கு மிக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருந்தது, காதல் இல்லறம், கல்வி, கலை விழாக்கள் பொழுது போக்குகள், ஆடை அணிகலன்கள் போன்ற அனைத்திலும் பெண்கள் முழு உரிமையுடன் வாழ்ந்து வந்தனர். இல்லற வாழ்க்கையில் கணவனும் மனைவியும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர் என்பதை குறிந்தொகைப் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது. “நல்லோர் கணவன் இவன் என்னைப் பல்லோர் கூற வேண்டும் என ஆடவர் விரும்பினர். மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் எனக் கூறிக்கொள்வதை மகளிர் விரும்பினர்.

**இம்மை மாறி மறுமையாயினும்**
**நீயாகியர் என் கணவனை யானாகியர்**
**நின் நெஞ்சுநோபவளே (குறுந். பா.எண், 49)**

**அரசியலில் மகளிர் நிலை**

சங்க காலத்தில் மகளிர் ஆட்சி புரிந்ததாகவோ அமைச்சராக இருந்ததாகவோ அதற்கானச் சான்று இல்லை. படைத்துறைகளிலும் அவர்கள் பங்கேற்கவில்லை. ஆனால் புலவராக விளங்கி அரசர் மனத்திலும், அரசியலிலும் செல்வாக்குப் பெற்று விளங்கினர். சங்க காலத்தில் மகளிர் போரிடவில்லையே தவிர மற உணர்வில் ஈடு இணையற்று விளங்கினர். தம் மக்களை மறப்போர் புரியத் தூண்டி நின்றமையைக்

**களிறு எறிந்து பெயர்தல்**
**காளைக்குக் கடன் (புறம்- 279)**

என மகனுக்கு ஒரு தாய் நினைவூட்டுகிறாள். போரில் தன் கணவனையும், உடன் பிறந்தவனையும் இழந்த பின்னரும் போர்ப்பறைகேட்டு,

**ஒரு மகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கெ (புறம்- 279)**

என விடுத்து நிற்கிறாள் ஒருபெண். இவ்வாறு சங்க காலத்தில் பெண்கள் சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்தனர்.

**19-20 நூற்றாண்டுகளில் இந்தியப் பெண்களின் நிலை**

இந்திய சமூகத்தில் பெண்களின் நிலையினை ஆராய்ந்தால் பெண்கள் பிறந்தது முதல் இறப்பு வரையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு விதமான சமூகக் கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர் என்பதையே காட்டுகின்றது. உதாரணமாக, “காலப்போக்கில் ஒரு சமூகத்தில் பெண்களும் அவர்களது கற்பும் அச்சமூகத்தின் ஆண்மக்களில் காக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. பெண்கள் அவர்களது வாழ்நாள் முழுவதும், ஆண்களால் பாதுகாக்கபட வேண்டியவர்கள் என்ற நிலை உருவாகிய பொழுது இளம் வயதிலேயே பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் வழக்கில் இருந்தது.” (பெண்களும் வாழ்வியல் படைப்பும், 2003) இவ்வாறாக பெண்கள் வலிமையற்றவர்கள் அவர்கள் பாதுகாக்கபட வேண்டியவர்கள் என்ற கருத்துக்கள் வலிமையுற்றதால் திருமணமே ஒரு பெண்ணின் வாழ்க்கையின் குறிக்கோளாக அமைந்தது. சிறு வயதிலேயே பெண் குழந்தைகளைத் திருமணம் செய்து கொடுப்பதும் அவர்களை வெளியுலக வாழ்வில் அனுமதிக்காமல் வீட்டிற்குள் அடைத்து வைப்பதும் பொருளாதாரச் சுதந்திரம் அளிக்காததும் கணவன் இறந்த பின்பு கைம்மையின் கொடுமைகளை அனுபவிக்கச் செய்வதும் உயர் சாதி மக்களிடையே அதிகமாகக் காணப்பட்டது.

**பெண்களை தனிமைப்படுத்துதல்**

பெண்களை தனிமைப்படுத்தும் வழக்கம் இந்தியாவின் எல்லா இடங்களிலும் கடைபிடிக்கப்பட்டு வந்தது. இதைக் குறித்து பெண்களும் உள்ளார்ந்த தணிக்கையமைப்பும் என்ற நூலில் பின்வருமாறு செய்தி கூறப்பட்டுள்ளது.

**பெண்களின் வாழ்க்கை வீட்டிற்குள் சில அறைகளுக்குள் முடக்கப்பட்டது. அவர்களது மனமும் அறிவும் வளர்ச்சியடைய இடைமுறை கடையாக இருந்தது. வெளி உலகக் காற்றை அடிக்கடி சுவாசிக்காத பெண்கள் பலர் இதனால் அவர்களை காசநோய் போன்ற பல்வேறு நோய்களுக்கு ஆளானார்கள் (பெண்களும் உள்ளார்ந்த தணிக்கையமைப்பும் ப-29)**

**சமூக மாற்றங்களும் இந்திய பெண்களும்**

இந்தியாவின் ஆங்கில ஆட்சியின் போது சமூகத்தில் ஏற்பட்ட சில முக்கிய மாற்றங்கள் பெண்களின் நிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இந்தியா ஆங்கில அரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கால கட்டத்தில் இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்ட பெண்சிசுக் கொலை,

உடன்கட்டை ஏறுதல், கைம்மை வாழ்வு போன்ற பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு பேரதிர்ச்சியை அளித்தன. ஆங்கிலக் கல்வியின் தாக்கம் பெற்ற ஆண்கள் எவ்வளவு தான் மேல்நாட்டு நாகரிகத்தைப் பெற்றிருப்பினும் பெண்களின் முன்னேற்றம் குறித்த மேலைநாட்டுக் கருத்துக்களை ஆதரிக்கவில்லை. இந்தியக் கலாச்சாரம் கற்பு நெறி, தாய்மை போன்றவற்றையே காக்க முற்பட்டனர்

**தற்காலத்தில் பெண்கள் நிலை**

பண்டைய காலகட்டத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று பெண்கல்வி இல்லா நிலையை உருவாக்கி விட்டார்கள் ஆனால் இன்று,

**ஆணுக்கு பெண் இளைப்பில்லை**
**கான் கும்மியடி (பாரதியார் கவிதைகள், ப.19)**

என்ற பாரதியாரின் கவிதைப்படி பெண்கள் சிறு தொழில் முதல் ஓட்டுநர் வரை பல துறைகளிலும் ஆண்களைப் போட்டி போடுகின்றார்கள். ஒவ்வாரு பெண்ணுக்கும் பிறப்பிலிருந்து இறப்புவரை பல போராட்டங்கள் இருப்பினும், இன்றைய நாளில் பெண்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், ராணுவம், காவல் துறை, கப்பல் என்று அனைத்து துறைகளிலும் பெண்களும் இன்று காணப்படுகின்றனர், இதை, "ஒரு ஆண் அரசியல்வாதியானால் அந்த பலா பலன் அவனை சுற்றியே இருக்கும் ஒரு பெண் படித்தால் அறிவு பெற்றால் அரசியல் வாதியானால் அவள் குழந்தைகள் குடும்பம் அவள் சேர்ந்த சமுதாயம் முன்னேறும்." (பெண்களும் வாழ்வியல் படைப்பும், ப.63) என்ற கூற்றின் மூலம் அறியலாம் ஆகவே இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் குறித்த சிந்தனைகளும் இயக்கங்களும் பலுகி பெருகிக் காணப்படுகின்றன

**முடிவுரை**

இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் நிறையப் படித்திருக்கின்றனர். எல்லாவிதமான இலக்கியங்களின் அறிவும் அவர்களிடையே காணப்படுகின்றது. எதையும் ஆராய்து பார்க்கும் திறன்களைப் பெற்றிருக்கின்றனர். பெண்களின் எல்லைகள் விரிவடைந்திருக்கின்றன. இன்றைய காலக்கட்டத்தில் பெண்ணியம் என்ற சொல் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது.

**குறிப்புகள்**

[1] ஞானி. *பெண்களும்வாழ்வியல்படைப்பும்.* தமிழ்நேயம், கோவை, முதல்பதிப்பு, 2003.

[2] முத்துசிதம்பரம். *பெண்ணியம் தோற்றமும் வளச்சியும்.* தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, ஐந்தாம்பதிப்பு-2005.

[3] விஜயலட்சுமி. *பெண்களும் உள்ளார்ந்த தணிக்கையமைப்பும்.* தமிழ். புத்தகாலயம், சென்னை.

[4] ராஜம்கிருஸ்ணன். காலந்தோறும்பெண். நேசனல்புக். டிரஸ்ட், புதுடில்லி- 2002.

[5] பாரதியார். *பாரதியார்கவிதைகள்.* நேசனல்புக். டிரஸ்ட், புதுடில்லி- 2002.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.